# மீடியாவும் பெண்கள் துஷ்பிரயோகங்களும்

( தமிழ் – Tamil – تاميلي ]


**Author**

M.S.M. இம்தியாஸ் யூசுப்



2013 - 1434

IslamHouse.com

# الإعلام والإعتداءات على المرأة

« باللغة التاميلية»

إمتياز يوسف السلفي

2013 - 1434

# மீடியாவும் பெண்கள் துஷ்பிரயோகங்களும்,

எம்.எஸ்.எம். இம்தியாஸ் யூசுப் ஸலபி.

இந்த நூற்றாண்டிலும் கடந்த நூற்றாண்டின் இறுதியிலும் அழுத்தமாகப் பேசப்பட்ட விடயங்களில் சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்களும் அதனை தடுப் பதற்கான வழிகளும் என்ற விடயமுமாகும்.

அறிவியல் வளர்ந்து செல்லும் காலமெல்லாம் மனிதனிடத்தில் அசிங்கங் களும் அனாச்சாரங்களும் நாகரீகத்தின் பெயரால் வளர்ந்து வந்திருக்கிறது என்ப தற்கு இந்த சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்கள் என்ற விடயம் ஒரு எடுத்துக் காட்டாகும்.

மனித சமுதாயம் ஆண்பெண் என்ற இருசாதியினரைக் கொண்டதாக ஆக்கப் பட்டிருக்கின்றது. ஆணின்றி பெண்ணோ, பெண்ணின்றி ஆணோ தனிமையில் முழுமையான வாழ்வை மேற்கொள்ள முடியாது. இவ்வாறான வாழ்வும் பூரணத்து வம் அடையாது.

சட்டப்பூர்வமாக ஆண்பெண் இணைந்த வாழ்வின் மூலம் மட்டும்தான் பூரணத் துவமான சந்தோசமான வாழ்வை மேற்கொள்ள முடியும் சந்ததியை விருத்தி செய்ய முடியும். இவ்வாறு விருத்தி செய்யப்படும் சந்ததியினரை வளமான மக்களாகவும் மனிதாபிமானம் மிக்க, ஒழுக்கப் பண்புகளைக் கொண்ட மனிதர் களாகவும் உருவாக்கக் கூடிய பொறுப்பின் பெரும் பகுதி பெண்களையே சாரும். இப்பொறுப்பை ஆண்களால் சுமக்க முடியாது. இவற்றுக்கு ஏற்றாற் போலவே பெண்களின் சுபாவமும் அமைக்கப் பட்டிருக்கிறது.

எனவே, மனித சமுதாயத்தை உருவாக்குவதில் பெண்கள் பெரும்பங்காற்றி வருகின் றார்கள் என்று துணிந்து கூறலாம். என்றாலும் பெண்களுடைய இந்தப் பொறுப்பு சிதறடிக்கப் பட்டு சீரழிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. பெண்கள் பெண்களுக்குரிய பெண்மையை பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளாமல் தங்களது உடை நடை பாவனைகள் மூலம் நாசத்தை தேடிக்கொள்கிறார்கள்.

சுதந்திரம், சமத்துவம் நாகரீகம் என்ற பெயரில் வரம்புகளைக் கடந்து ஆடை களைக் குறைத்து, அங்கங்களைக் காட்டி பெண்கள் நடமாடும் போது நாசத்தைத் தவிர வேறெதனை யும் கண்டுகொள்ள முடியாது. அந்த நாசத்திற் குரிய செயல்களாகத்தான் 'பெண்கள் துஷ்பிரயோகம்' விஸ்வரூபமெடுத்திருக்கிறது.

சிறுமி, யுவதி, வயதான பெண் என்ற எவ்வித வேறபாடுமின்றி இம்சை களுக்கும், துன்புறுத் தல்களுக்கும் பாலியல் ரீதியான பலாத்காரங் களுக்கும் நாள்தோறும் ஆளாகி வருகிறார்கள். இப் பலாத்காரம் வீட்டிற்குள்ளேயும், வெளியி லும் தாராளமாக நடந்து வருகிறது. சிலவேளைகளில் இந்தத் துஷ்பிர யோகங்கள், பலாத்காரங்களிலும் கொலை களிலும் முடிவடைந்து விடுகின்றன.

தற்போது இவங்கை தொலைக்காட்சிகளில் ( ITN மற்றும் சுவர்ணவாஹினி) ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் 'எகிலிசலகுன ( FINGAR MARKS) 'யெஹெலிய (நண்பி)' என்ற நிகழ்ச்சிகள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இவ்வாறு நிகழ்சிகளிலும் சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய விதமும், கொலை கொள்ளை விவகாரங்கள் நடந்ததற்கான காரணங்களும் காட்டப்படுகின்றன. இவ்வாறான குற்றங்கள் செய்து கைதாகி சிறைச்சாலைகளில் இருக்கும் குற்றவாளிகளின் வாக்குமூலங்களைப் பெற்று அதனை ஒரு நாடகமாகத் தயாரித்துக் காட்டுகிறார்கள். இதுபோன்ற செயல்களில் மக்கள் ஈடுபடக் கூடாது. அத்தோடு, இதுபோன்ற காரணிகள் உருவாகுவதை அடையாளம் கண்டால் விலகிச் செல்வதற்கும் தப்பித்துக் கொள்வதற்கும் வழிகாட்டு கிறார்கள்.

இந்த நிகழ்ச்சிகளில் பெரும்பகுதி பெண்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய விதம் பற்றியே காண்பிக்கப்படுகின்றன.

சமுதாயத்தில் பெண்கள் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதற்குக் காரணம், பெண்கள் துஷ்பிரயோகம் என்றால் என்ன என்ற அடிப்படையான அறிவின் மையும், இதற்கெதிரான சட்டங்கள் வலுவானதாக இல்லாமையும் பிரதான மான காரணங்களாகும்.

பெண்கள் தங்களது பெண்மையைக் காப்பாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கை களில் ஆர்வம் காட்டாமை இரண்டாவது காரணம்.

மீடியாக்கள் பெண்களை அதிகளவு பயன்படுத்தி பெண்களை விளம்பரப் பொருட்களாகவும், காமப் பொருளாகவும், போதை தரும் மருந்தாகவும் சித்தரிக்கும் பாணியில் செல்வதும் மூன்றாவது காரணம்.

இம்மூன்று காரணங்களாலும் பெண்கள் அதிகளவு துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகுகிறார்கள். எனவே, சமுதாயக் கட்டுக்கோப்பை நிலை நிறுத்துவதற்கு இந்த துஷ்பிரயோகம் பற்றிய அறிவை, விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியாக வேண்டும்.

## மீடியா என்றால் என்ன?

தகவல் தொடர்பு சாதனங்கள், ஊடகங்கள் வெகுஜன தொடர்பு சாதனங்கள் என்று பல பெயர்களில் இந்த மீடியாக்கள் அழைக்கப் படுகின்றன.

'தகவலை அனுப்புபவருக்கும் பெறுபவருக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவது, அத்அதாடர்ப்பினை ஏற்படுத்த பயன்படுத்தப்படும் சாதனமே மீடியா' என்படும். மக்களுக்கு அறிவுறுத்துவது நல்வழியில் நடத்துவது என்ற தார்மீக கொள்கையில் செயற்படுவதே மீடியாவின் பிரதான நோக்கமாகும். ஆனால் இந்த பண்புகளை கடந்து ஒழுக்கச்சீரழிவுகளை அள்ளி வீசி பணம் சம்பாதிப்பதனை நோக்காகக் கொண்டு மீடியாக்கள் செயல்படுகின்றன.

## பெண்கள் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

பெண்கள் துஷ்பிரயோகம் என்றால் பலரும் நினைப்பது அல்லது சொல்ல விளைவது பெண்களைக் கற்பழிப்பது, கற்பழிக்க முனைவது என்ற இரு காரணங் கள்தான்.

எனவே, ஒரு பெண்ணை ஒருவன் கற்பழித்து விட்டால் அல்லது அதற்கான முயற்சிகளை செய்துவிட்டால் அதுதான் பெண்கள் துஷ்பிரயோகம் என கருது கிறார்கள். அதுமட்டும் பெண்கள் துஷ்பிரயோகமல்ல. பெண்கள் துஷ்பிரயோகம் என்பது இரு வகைப்படும்.

முதலாவது :

வார்த்தைகளால் துஷ்பிரயோகம் செய்தல்.

இரண்டாவது :

செயல்களால் துஷ்பிரயோகம் செய்தல்.

## வார்த்தைகளால் துஷ்பிரயோகம் செய்தல் :

அதாவது ஒரு பெண்ணிற்கு இருக்கக் கூடிய பெயரைக் கூறி அழைக்கும் போது அதில் நெழிவு சுழிவுகளைக் காட்டி ஒரு மாதிரியான முறையில் அழைத் தல். உதாரணமாகளு லதா என்பது ஒரு பெண்ணின் பெயர். லதா இங்கே வா என்று அழைத்தால் அது துஷ்பிரயோகமாகாது. மாறாக லதா... இங்கே... வாயேன் என்று அப்பெயரை நீட்டி சுருக்கி மயக்கம் கலந்த வார்த்தையில் அழைத்தால் அதுதான் துஷ்பிரயோகமாகும்.

- அடேய்! அதோபார் வாவ்!! என்ன அழகு! என்ன பக்குவம்!! மல்லிகைப் பூவுக்கும் அவள் சிரிப்பிற்கும் வித்தியாசம் தெரியல் லையே!! என்ற மாதிரி பெண்களைப் பற்றிய வர்ணனைகள்.
- இரட்டை அர்த்தத்துடனான பேச்சுக்கள்.
- இரட்டை அர்த்தத்துடனான நகைச்சுவைகள்.
- பாலியல் ரீதியான பேச்சுக்கள், சேட்டைகள்.
- ஆபாசமான சந்தேக மொழிகள் மற்றும் வார்த்தை கள் என்பனவும் வார்த்தை ரீதியான துஷ் பிரயோகங்களாகும்..

## **செயல்களால் துஷ்பிரயோகம் :**

- ஒரு பெண்ணைப் பார்த்து கண்ணடித்தல், முறைத்துப்பார்த்தல்.

- அங்கங்களை உரசுதல், பிடித்தல், தடாவுதல் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- ஆபாசப் படங்களை அல்லது காட்சிகளைக் காட்டுதல்.
- கற்பழித்தல்.
- கற்பழிக்க முயற்சித்தல். என்பன செயல் ரீதியான துஷ்பிரயோகங்களாகும்.

ஆனாலும், பெரும்பாலும் பெண்கள் இந்த வரைவிலக்கணத்தை அறியாதவர் களாக இருக்கி றார்கள். எந்த ஆண்மகனாவது மேற்குறித்த ஏதோ ஒரு விதத்தில் நடந்து கொண்டால் அவனுக்கெதிரா கச் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க முடியும்.

## பெண்கள் துஷ்பிரயோகம் உருவாகுவதற்கான காரணிகள்:

பெண்கள் துஷ்பிரயோகத்தின் விளக்கத்தைக் கவனித்தால் ஒவ்வொரு நிமி டமும் பெண்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகுகிறார்கள் என்று எல்லோரும் இப்போது ஏற்றுக்கொள்வார்கள். அப்படியாயின், ஏன் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியவில்லை? அல்லது தடுத்து நிறுத்த முடியவில்லை? காரணம், பெண் களின் நடை, உடை பாவனையும் வெகுஜன தொடர்பு சாதனங்களும் (மீடியாக்கள்) தான்.

கற்பழித்தல் அல்லது கற்பழிப்பதற்கு முயற்சித்தல், பலவந்தப்படுத்தல் என்ப தை அசிங்க மான காரியம், கடுமையான குற்றம் என்பதை புரிந்து வைத்துள்ள அள விற்கு பெண்கள் துஷ்பிரயோகத்தின் ஏனைய அம்சங்களை சமுதாயம் புரிந்து கொள்ளவில்லை. பெண்கள் எதனை புரிந்துகொள்ளாமல் விட்டார்களோ அல்லது அக்கறை செலுத்தாமல் விட்டார்களோ அதனை மீடியாக்கள் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டன. அதனை ஒவ்வொன்றாக கவனிப்போம்.

## சினிமா:

- சினிமா என்பது மிகப்பெரிய ஊடகமாக கூறப்படுகிறது. இந்த சினிமா வில் கதாநாயகியின் தொப்புள் தெரியும் குரூப் டான்ஸ்,

- ஆடையை உரித்துப் போடும் காட்சி.
- தொப்புளில் கோலம் போடும் காட்சி,
- காமெடி பெயரால் விரசம் கொட்டும் வசனங்கள், பாடல்கள்,
- கற்பழிப்புக் காட்சி, படுக்கையறை காட்சி இரட்டை அர்த்தம் கொண்ட வார்த்தைகள்

என்று சினிமா பெண்களைப் பயன்படுத்துகிறது. பெண்கள் பணத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படுவதாலும் சினிமாவைப் பொழுதுபோக்கு அம்சமாகக் கருதுவதாலும் பெண்கள் துஷ்பிரயோகத்திற்கான வழிகள் திறந்துவிடப்பட்டுள்ளன. இன்னுமொரு வார்த்தையில் கூறுவதானால் இதனை தெய்வீக அம்சம் பொருந்திய கலையாக காண்பிக்க முனைகிறார்கள். இப் பாத்திரம் எடுத்து நடிப்பவர்கள் கோடி கணக்கில் பணம் சம்பாதிக்கிறார்கள். இவர்கள் மகா நடிகர்கள் சமூகஆவலர்கள் என்று கூட அழைக்கப்படுகிறார்கள். வருடாந்தம் அவாட்கள் கூட வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறாரகள்.

பத்திரிகை மற்றும் தொலைக்காட்சியை எடுத்துக் கொண்டால், அங்கே விளம்பரத்துக்கு முக்கிய இடம் உண்டு. அந்த விளம்பரத்தில் பெண்ணின் உடம்பிற்கும் அதன் அங்கங்களுக்கும் தனி இடமுண்டு. பெண்கள் இல்லாமல் எந்தவொரு பொருளையும் விளம்பரப்படுத்த முடியாது என்ற நிலைக்கு விளம்பரம் போய் விட்டது.

சந்தைப்படுத்தும் பொருளுக்கும், அந்தப் பெண்ணுக்கும் எந்த சம்பந்தமுமில்லாவிட்டாலும் பெண்ணை குட்டைப் பாவாடையுடன் இடை, தொடை தெரியும் காட்சியுடன் விளம்பரப்படுத்துகிறார்கள்.

செருப்பு விற்பனைக்கும், டயர் விற்பனைக்குமான விளம்பரத்திற்கும் பெண்களை ஏன் அரை குறை ஆடையுடன் காட்சியளிக்கச் செய்கிறார்கள் என்பது புரியவில்லை.

பத்திரிகையில் 'A' டைடலில் வெளிவரும் படங்களுக்கும் காட்சிகளோடு விளம்பரம் கொடுக் கிறார்கள். இராணுவத்தில் இளைஞர்களைச் சேர்ப்பதற்கும் இளம் பெண்கள் கூட்டத்தைக் காண்பிற்கிறார்கள். வாசனைப் பொருட்களை விற்

பதற்கும் 'காமப்பார்வையுடன்' பெண்ணைக் காட்டுகிறார்கள். மீடியாக்கள் பெண்களை ஏன் இப்படிக் காட்ட வேண்டும்? என்பதும் தெரியவில்லை. ஆனாலும், மாதர் சங்கங்கள் பெண்கள் அமைப்புக்கள் இது விடயத்தில் மௌனமாகவே இருக்கின்றன. அரசாங் கமும் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி நிற்கிறது.

## அழகுராணிப் போட்டி :

பெண்களின் அங்கங்களை ரசித்து, ருசித்து விலைபேசி பரிசு கொடுக்கும் போட்டியாக வக்கிரப்புத்தியுடைய ஆண்கள் உருவாக்கியது தான் அழகுராணிப் போட்டி..

பெண்கள் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பற்றி பேசப்படும் நாடுகளில் இப்போட்டி நகைச்சுவை விருந்தாக உள்ளது. ஆண்களின் உள்ளங்களை குறிவைப் பதற்காக அரைகுறை ஆடையுடன் ( அரை நிர்வாணத்துடன்) பெண்கள் அணி வகுத்து வரவேண்டும். அங்கங்களை கூடுதலாக காட்டுபவர்களுக்கு கிறீடம்| சூட்டு வோம் என்கிறார்கள்.

உண்மையில் இந்தப்போட்டி நிர்வாண அணிவகுப்பே தவிர வேறு எதுவு மில்லை. பெண்கள் துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்கான ஊற்றுவாய் இதுதான்.

## ஓவியம் :

வரலாற்றுத் தொடக்கம் இன்றுவரை ஓவியத்திற்கு மக்கள் மத்தியில் மதிப் புண்டு. அந்த ஓவியங்களில் பெண்களை ரசனைப் பொருளாக வடிப்பதில் தனி இடமுண்டு. இந்த ஓவியங்கள், கல்வெட்டுக்கள் அழகுணர்ச்சியை மையமாகக் கொண்டு வரையப்பட்டு செதுக்கப்பட்டாலும் அது பெண்களைத் துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்தப் பட்ட ஒரு காரணியாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

பௌத்த மதத்தில், இந்து மதத்தில் ஓவியத் திற்கு முக்கிய இடமுண்டு. அது மதத்தின் சின்னமாகவும் அடையாளப்படுத்துவதுமுண்டு. இம் மதங்களின் பெயரால் செதுக்கப்பட்ட ஓவியங்கள் அரை நிர்வாணத்துடன் - உடலுறவுக் காட்சி களுடன்-வைக்கப்பட்டுள்ளன. அதுவும் அவர்களது ஆலயங்களில் வழிபாட்டு ஸ்தலங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இறைவனை வணங்குவதற்காக, வழிபடு வதற்காக கட்டப்பட்ட ஆலயங் களில் இந்த நிர்வாண ஓவியங்கள் எதற்காக? உடலுறவுச் சிற்பங்கள் எதற்காக? இறைவனை வணங்கு வதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

இளைஞர்களின் பாலுணர்வைத் தூண்டு வதற்கும், பெண்களைத் துஷ்பிரயோ கத்திற்கு உட்படுத்துவதற்கும் இதுவும் ஒரு காரணமாகும்.

## இணையம்

பரந்து விரிந்த ஒரு சிறிய கிராமம் அளவிற்கு அடக்கி, தகவல் தொடர்பை மிக எளிமையாக்கிய அற்புதமான தொழில்நுட்பம் கம்பியூட்டர். அதில் ஒரு அங்கம் இணையம்.

இணையம் இன்றைய உலகின் அத்தியாவசியமான ஒரு தொழில் நுட்பம். 24 மணித் தியாலங்களிலும் உலக நிலவரங்களை அறிந்து கொள்ள முடியும். இந்த அற்புதமான சாதனத்தை மனித குலத்தின் கண்ணியத்தைக் குலைத்து சமுதாயத் தை அழிவில் வீழ்த்தி கலாசாரசீரழிவை ஏற்படுத்தும் கரு வியாக மாற்றி விட்டார்கள்.

இணையத்தினூடாக ஆபாசங்களை அள்ளிவீசி, பெண்களை துகிலுரித்துக் காட்டும் படங்களைப் புகுத்தி விட்டார்கள்.

வயதுவந்த ஆணும், பெண்ணும் கம்பியூட்டருக்கு முன்னால் இரவு வேளை களில் நின்றால் பெற்றார்கள் பயப்படுகிறார்கள். பிள்ளைகள் தவறான பக்கத்துக்குப் போய்விடுவார்கள் என்று! அண்மையில் தமிழ்நாட்டில் Dr.. பிரகாஷ் என்பவரும், இலங்கையில் இரத்தினபுரி எனும் பகுதியில் இளைஞன் ஒருவனும் இணையத் தைப் பயன்படுத்தி ஆபாசப்படங்களைப் புகுத்திய செய்தி பரபரப்பாக பேசப்பட்டதை யாவரும் அறிந்ததே!

அவ்வாறே FaceBook நவீன செல்போன்களும் இன்று விபசாரத்திற்கும், ஆபாசத்திற்கும் பயன்படுத் தப்பட்டு வருகிறன. பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாலியல் தொழிலுக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் ஈடுபடுத்தும் ஊடகமாக உரு மாறிவிட்டது.

## பெண்கள் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான வழிகள் :

இந்த ஊடகங்கள் மூலம் அதிகரித்து வரும் பெண்கள் துஷ்பிரயோ கங்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் பெண்கள் மிக முக்கிய பங்களிப்பை வழங்க வேண்டும். ஆடிஅசையும் உடல் அங்கங்கள், அதன் பரிமானங்கள் வெளியே தெரியும் விதத்தில் ஆடைகள் அணிவதால்தான் கற்பழிப்புக்கும், துஷ்பிரயோ கத்திற்கும் ஆளாகுகிறார்கள்.அண்மையில் டில்லியில் நடந்த கற்பழிவு சம்பமும் இதன் பின்னணியில் தான் பகிரங்கமாக பேசப்பட்டது என்பதை யாவரும் அறி வோம்.

சிலபெண்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது உட்கார்ந்து கொண்டி ருக்கும் வேளையில் நெஞ்சுப்பகுதியை கையினால் அல்லது நீண்ட கூந்தலினால் மறைத்துக் கொள்கிறார்கள். காரணம் நின்று கொண்டிருக்கும் ஆண்களின் கடக்கண் பார்வைக்குத் தெரிந்துவிடாமல் தடுப்பதற்காகும்.

மேலும் பெண்கள் ரீசேட், ரவுஸர், குட்டைப் பாவாடை அணிந்துகொண்டு வீதியில் போகும்போது அவர்கள் அவஸ்த்தைப்படுகிறார்கள். அவர்கள் குணிந்து ஒரு வேலையைச்செய்ய முடியாது. குணிந்தால்.... நிலமை விபரீதமாகிவிடும் என்று அவர்களுக்குத் தெரியும்.காரியாலயங்களில் பெண்கள் அதிக துஷ்பிரயோ கங்களுக்கு ஆளாகுவதற்கு அவர்களின் ஆடைகளே காரணமாகும். ஆண்களுக்கு நீண்ட காட்சட்டை அணிவதற்கு அனுமதிப்பவர்கள் பெண்களுக்கு குட்டைப் பாவாடையை ஏன் திணிக்கிறார்கள் என்பதை சிந்திக்க வேண்டும்.

ஆட்டை வேட்டையாட ஓனாய் காத்திருப்பது போல் பெண்களை வேட்டை யாட ஆண்கள் சந்தர்ப்பம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, பெண்கள் தங்களது உடை நடைகளை மாற்றினால் தான் துஷ்பிரயோகங்களை நிறுத்திவிட முடியும்.

சிறுவர், பெண்கள் பாதுகாப்பு நிலையத்தில் பொலிஸ் அதிகாரி, சப்இன்ஸ் பெக்டர் திரு.மனோஜ் அவர்கள் கூறும்போது, பெண்கள் துஷ்பிரயோ கங்களை நிறுத்த வேண்டுமானால் அவர்கள் அவர்களது ஆடைக்குறைப்பைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். முஸ்லிம் பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்களது உடம்பை முழுமையாக மறைத்துக்கொண்டு போகிறார்கள் என்றார்.

மனநிலை மருத்துவர் நளினி மோகன் தாஸ் கூறுகையில், பெண்களே உங்கள் உடல் அமைப் புக்கு ஏற்றமாதிரி உடை உடுத்துங்கள் 'மாடர்ன் டிரஸ்' என்ற பெயரில் ஆண்களின் பாலுணர்ச் சியைத் தூண்டும் விதத்தில் போடாதீர்கள். உங்கள் ஆடை மற்றவர்களின் கண்களை ஊடுருவும் அளவுக்கு மெல்லியதாகி விடக்கூடாது என்றார். (தினமலர்)

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டெனிகன் பெரேரா அவர்கள் கூறுகையில்ளூ பாலியல் துஷ்பிரயோ கங்களுக்குப் பெண்கள் உள்ளாக் கப்படுவதற்கு பெரும்பாலும் ஆடைகளே காரணமாக இருக்கலாம். அணியக் கூடிய ஆடைகள் உடல் அங்கங்களை மறைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

அங்கங்களை காட்டக்கூடிய ஆடைகள் அணியும்போது தவறான எண்ணம் உள்ளவர் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தக்கூடும். பெண்களின் ஆடைகள் முறை யாக இருப்பது மிகவும் அத்தியாவசியமானதாகும் என்றார் ( நன்றி:சிறிகத பத்திரிகை)

பெண்களின் கற்புக்குப்பாதகமாக அமைவது, அவர்களது அரைகுறை ஆடை களே காரணம் என்பதை எல்லோரும் கூறுகிறார்கள். பெண்களும் ஏற்றுக் கொள் கிறார்கள்.

அதுமட்டுமல்ல, வீடுகளில், பாடசாலைகளில் பெண்கள் மேலதிகாரி களால், ஆசிரியர், அதிபர்களால், மாமன்மார்களால் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகுகிறார் கள். அதற்கும் இந்த ஆடைக் குறைப்பே காரணம்.

இந்த ஆடைக்குறைப்பைத் தவிர்த்துக் கொள்வது போல்,

- ✓ ஆண்களுடன் தனிமையில் பேசுவது, சந்திப்பது, பயணிப்பதைத் தவிர்த்தல்.
- ✓ வீட்டில் தனிமையில் இருப்பதைத் தவிர்த்தல்.
- ✓ தனிமையில் இருப்பதாக மற்றவர்களுக்குத் தெரிவிப்பதைத் தவிர்த்தல்.
- ✓ இளம் பெண்களை, சிறுமிகளை தனிமையில் வீட்டில் விட்டுவிட்டுச் செல் வதைத் தவிர்த்தல்.

- ✓ இரவு நேரங்களில் பயணங்களைத் தவிர்த்தல் மற்றும் வீட்டுக்கதவுகளை, ஜன்னல்களை மூடிக்கொள்ளல்.
- ✓ வீடுதேடிவரும் வியாபாரிகளிடம், பால்காரனிடம், குப்பைகளை எடுத்துச் செல்பவனிடம் அதிகம் பேசுவதைத் தவிர்த்தல்.
- ✓ அதிகாரிகளிடம் அன்பளிப்புக்களைப் பெறுதல் அவர்களைத் தனிமையில் சந்தித்தல் நெருங்கி இருத்தல் என்பதைத் தவிர்த்தல்.

போன்ற காரியங்களைத் தவிர்ப்பதன் மூலமும், துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப் படுவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

உலக நடைமுறையில் இவ்வாறான அறிவுறுத்தல்கள்தான் பெண் களுக்கு வழங்கப்படுகின்றன. ஆனாலும், இவ்வறிவுறுத்தல்களால் பாரிய மாற்றம் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

மக்கள் இந்த அறிவுறுத்தல்களை மானசீகமாக ஏற்று பின்பற்றத் தயாராக வுமில்லை. பெண்களது உடல் வடிவமைப்பை அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து ஆடைகள் வரும் போது, ஊடகங்கள் செயற்படும் போது இதனைத் தடுக்க முடியாது.

பெண்கள் நவநாகரீகத்தின் மோகத்தால் அலைந்து திரியும் போது உடல் உள பரிமானங்களைக் காட்சிப் பொருளாகக் காண்பிக்கின்ற போதும் இதனைத் தடுக்க முடியாது.

எனவே, உலகிலுள்ள பல மதத்தவர்களும் எவ்வளவுதான் போதனை செய்தாலும் இதனைத் தடுக்க முடியவில்லை என்றால் அந்தப் போதனை மக்களின் நடத்தைகளை மாற்றக்கூடியதாக அவர்களது உள்மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இல்லை என்பதே உண்மை. அது மட்டுமன்றி இப்போதனை களைச் செயற்படுத்தா விட்டால் கடவுளின் கோபத்திற்கும், தண்டனைக்கும் ஆளாக வேண்டிவரும் என்ற பயம் இல்லாதது மாகும். என்னை வழிநடாத்த, கண்காணிக்க ஒரு சக்தி இல்லை. என்னுடைய நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்க ஒரு சக்தி (கடவுள்) இல்லை என்று மனிதன் நம்பும் போது அவனிடத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. அவனால் மனித சமூகத்திற்குத் தேவை

யான ஆரோக்கிய மான சூழலை ஏற்படுத்த முடியாது. சீரழிவற்ற தனிமனித, குடும்ப, சமூகவாழ்வைக் கொண்டு வரவும் முடியாது. எல்லாத் துறைகளும் வீழ்ச்சியடைந்தேபோகும். அதன் ஓர் அங்கமாகவே பெண்கள் துஷ்பிரயோகம் இடம் பெற்று வருகிறது.

## இஸ்லாம் கூறும் தீர்ப்பு :

இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையில் அல்லாஹ்வை நம்புதல், மறுமை வாழ்வை நம்புதல் முஹம்மது(ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் என்பது முக்கிய மானதாகும்.

ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை, இவ்வுலகில் வாழ்ந்து மரணித்த பின் மறுமையில் அவன் அல்லாஹ்விடத்தில் அவனது செயற்பாடுகள் குறித்து பதிலளித்தாக வேண்டும் என்ற கொள்கையில் உள்ளவன். எனவே, முஹம்மது நபி(ஸல்) அவர்கள் காட்டித்தந்த வழிமுறைப் பிரகாரம் ஒவ்வொரு ஆண் பெண் முஸ்லிமும் வாழ்ந்தாக வேண்டும். அதனடிப்படையில் முஸ்லிம்கள் செயலாற்று கிறார்கள்.

இந்தச் செயற்பாட்டில் பிரதான அம்சம் தான் முஸ்லிம் பெண்கள் 'பர்தா' எனும் ஆடையைக் கடைப்பிடித்தல் என்பதாகும். தன்னுடைய உடல் அங்கங்களை முழுமையாக மறைத்தே ஆகவேண்டும். அன்னிய ஆண்களின் பார்வைக்கு இலக்காகும் விதத்தில் அவள் நடக்கக் கூடாதுள குடைந்து பேசக் கூடாதுளு தனிமையில் அன்னிய ஆண்களுடன் இருக்கக் கூடாதுளு பிரயாணம் பண்ணக்கூடாது என்பது கட்டளையாகும்.தன்னுடைய கணவனுக்குத்தவிர மற்ற வர்களுக்கு அவள் காட்சிப் பொருளாகக் கூடாது என்பதை இஸ்லாம் கண்டிப்பாக வலியுறுத்துகிறது.

இறைவனதும் இறைத்தூதரதும் இக்கட்டளைகளை முஸ்லிம் பெண்கள் பேணுவ தாலேயே பெண்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுவதை விட்டும் அவர்கள் தடுக்கப்பட்டு வருகிறார்கள். நடுநிலை சிந்தனையாளர்கள் இதனை இன்று ஏற்றுக்கொள்கிறார்கள்.

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான். 'ஆதமுடைய மக்களே! உங்கள் வெட்கஸ்தலங்களை மறைக்கும் ஆடையையும் அலங்காரத் தையும் உங்களுக்கு அருளியுள் ளோம். இறை அச்சம் எனும் ஆடையே மிகச் சிறந்தது. அவர்கள்(மக்கள்) சிந்திப்பதற்காக இது அல்லாஹ்வின் சான்றுகளில் உள்ளது.'

يَا بَنِي آدَمَ قَدْ أَنْزَلْنَا عَلَيْكُمْ لِبَاسًا يُوَارِي سَوْآتِكُمْ وَرِيشًا وَلِبَاسُ التَّقْوَى ذَلِكَ خَيْرٌ ذَلِكَ مِنْ آيَاتِ اللَّهِ لَعَلَّهُمْ يَذَّكَّرُونَ يَا بَنِي آدَمَ لَا يَفْتِنَنَّكُمُ الشَّيْطَانُ كَمَا أَخْرَجَ أَبَوَيْكُمْ مِنَ الْجَنَّةِ يَنْزِعُ عَنْهُمَا لِبَاسَهُمَا لِيُرِيَهُمَا سَوْآتِهِمَا إِنَّهُ يَرَاكُمْ هُوَ وَقَبِيلُهُ مِنْ حَيْثُ لَا تَرَوْنَهُمْ إِنَّا جَعَلْنَا الشَّيَاطِينَ أَوْلِيَاءَ لِلَّذِينَ لَا يُؤْمِنُونَ } [الأعراف: 26، 27]

'ஆதமுடைய மக்களே! உங்கள் பெற்றோர் ( ஆதம், ஹவ்வா) இருவ ரையும் ஷைத்தான் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றியது போல் உங்களையும் அவன் சோதனைக்குள்ளாகி விடவேண்டாம். அவர்கள் வெட்கஸ்தலங்களை அவர் களுக்குக் காண்பிக்க ஆடைகளை அவர்களை விட்டும் அவன் கழற்றினான். நீங்கள் காணாத வகையில் அவனும் அவன் கூட்டத்தாரும் உங்களைப் பார்த்துக் கொண்டி ருக்கிறார்கள். நம்பிக்கை கொள்ளதவர்களுக்கு ஷைத்தான்களை உற்ற நண்பர்களாக ஆக்கி விட்டோம்.' (7:26,27)

قُلْ لِلْمُؤْمِنِينَ يَغُضُّوا مِنْ أَبْصَارِهِمْ وَيَحْفَظُوا فُرُوجَهُمْ ذَلِكَ أَزْكَى لَهُمْ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا يَصْنَعُونَ وَقُلْ لِلْمُؤْمِنَاتِ يَغْضُضْنَ مِنْ أَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوجَهُنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا مَا ظَهَرَ مِنْهَا [النور: 30، 31]

'நபியே, விசுவாசமுள்ள ஆண்களுக்கு நீர் கூறும், அவர்கள் தங்கள் பார்வை களை கீழ் நோக்கியே வைக்கவும், தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ள வும். இது அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கறிந்து கொள்கிறான்.'

'நபியே, விசுவாசமுள்ள பெண்களுக்கும் நீர் கூறும், அவர்களும் தங்கள் பார்வைகளை கீழ் நோக்கி வைத்துத் தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். அன்றி ( தங்கள் தேகத்தில்) வெளியில் தெரியக்கூடியவைகளைத் தவிர தங்கள்

அழகையும், அலங்காரத்தையும் வெளிக்காட்டாது மறைத்துக் கொள்ளவும்ளூ தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக் கொள்ளவும்.' (24:30,31)

يَا أَيُّهَا النَّبِيُّ قُلْ لِأَزْوَاجِكَ وَبَنَاتِكَ وَنِسَاءِ الْمُؤْمِنِينَ يُدْنِينَ عَلَيْهِنَّ مِنْ جَلَابِيبِهِنَّ ذَلِكَ أَدْنَى أَنْ يُعْرَفْنَ فَلَا يُؤْذَيْنَ وَكَانَ اللَّهُ غَفُورًا رَحِيمًا } [الأحزاب: 59]

'நபியே! நீர் உம்மனைவிகளுக்கும், உம் பெண்மக்களுக்கும் ஈமான் கொண்டவர்களின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலை முன்றா னைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக அவர்கள் ( கண்ணியமானவர்கள் என) அறியப்பட்டு நோவினை செய்யப்படாமலிருக்க இது சுலபமான வழியாகும். மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவன்; மிக்க அன்புடையவன்.(33:59)

கற்பைப் பற்றி பேசும்போது உலகில் பெண்களுக்குத்தான் வலியுறுத்திக் கூறுவார்கள். எல்லா மதங்களிலும், கோட்பாடுகளிலும் இந்நிலையை நாம் பார்க் கிறோம். ஆனால், இஸ்லாத்தில் ஆண்களுக்குத்தான் முதன் முதலில் கற்பைப் பற்றி வலியுறுத்திப் போதிக்கப்படுகிறது. கற்பு என்பது பொதுவானது. இருவரும் கற்பைப்பேணிப் பாதுகாத்தாக வேண்டும் என்று கற்புக்கு இலக்கணம் கூறுகிற மார்க்கம் இஸ்லாம் மட்டும்தான்!

ஆண்கள் முறையாக தங்கள் கற்பைப் பேணிக்கொண்டால், தங்கள் பார்வை களை கீழ் நோக்கிக்கொண்டால், பெண்களின் கற்புக்குப் பாதுகாப்புக் கிடைக்கும். பெண்கள் துஷ்பிரயோகங்களை உருவாக்கும் காரணிகளைத் தடுத்து பெண்கள் அச்சமற்று நடக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஆண்களுக்கு போதனை செய்த பின்பு தான் பெண்களுக்கு கற்பின் புனிதத் துவம் பற்றிப் போதிக்கிறது.

பெண்களின் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறிய போதனையை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இன்றைய உல கிற்கு அவசரமாகத் தேவைப்படும் போதனை இது.

(صحيح مسلم (4/ 2047

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «كُتِبَ عَلَى ابْنِ آدَمَ نَصِيبُهُ مِنَ الزِّنَا، مُدْرِكٌ ذَلِكَ لَا مَحَالَةَ، فَالْعَيْنَانِ زِنَاهُمَا النَّظَرُ، وَالْأُذُنَانِ زِنَاهُمَا الِاسْتِمَاعُ، وَاللِّسَانُ زِنَاهُ الْكَلَامُ، وَالْيَدُ زِنَاهَا الْبَطْشُ، وَالرِّجْلُ زِنَاهَا الْخُطَا، وَالْقَلْبُ يَهْوَى وَيَتَمَنَّى، وَيُصَدِّقُ ذَلِكَ الْفَرْجُ وَيُكَذِّبُهُ»

'(ஒருஆண் செய்யும்) இரு கண்களின் விபச்சாரம் அன்னிய பெண்ணைப் பார்த்தல், இருகாதுகளின் விபச்சாரம் அவள் பேசுதை கேட்டல் நாவின் விபச்சாரம் - அவளுடன் பேசுதல், கையின் விபச்சாரம் - அவளைப் பிடித்தல், காலின் விபச்சாரம் (அவளைத்தேடி) நடத்தல், மர்மஸ்தானங்கள் இவை களை உண்மைப்படுத்துகின்றன. அல்லது பொய்யாக் குகின்றன என்று நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்' (நூல் : முஸ்லிம்)

(صحيح مسلم (2/ 978

عَنْ أَبِي مَعْبَدٍ، قَالَ: سَمِعْتُ ابْنَ عَبَّاسٍ، يَقُولُ: سَمِعْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَخْطُبُ يَقُولُ: «لَا يَخْلُوَنَّ رَجُلٌ بِامْرَأَةٍ إِلَّا وَمَعَهَا ذُو مَحْرَمٍ، وَلَا تُسَافِرِ الْمَرْأَةُ إِلَّا مَعَ ذِي مَحْرَمٍ

உங்களில் ஒருவர் பெண்ணுடன், அவளுடைய திருமணம் முடிக்கத் தடுக்கப்பட்ட உறவினர் இருந்தாலேயன்றி தனித்திருக்க வேண்டாம் உங்களில் ஒருவர் பெண்ணுடன், அவளுடைய திருமணம் முடிக்கத் தடுக்கப்பட்ட உறவினர் இருந்தாலேயன்றி பயணிக்க வேண்டாம் என முஹம்மது நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : முஸ்லிம்)

(صحيح مسلم (1/ 266

عَنْ أَبِيهِ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «لَا يَنْظُرُ الرَّجُلُ إِلَى عَوْرَةِ الرَّجُلِ، وَلَا الْمَرْأَةُ إِلَى عَوْرَةِ الْمَرْأَةِ، وَلَا يُفْضِي الرَّجُلُ إِلَى الرَّجُلِ فِي ثَوْبٍ وَاحِدٍ، وَلَا تُفْضِي الْمَرْأَةُ إِلَى الْمَرْأَةِ فِي الثَّوْبِ الْوَاحِدِ»

ஒரு ஆண் மற்றொரு ஆணின் மறைவிடத்தைப் பார்க்கவேண்டாம். ஒரு பெண் மற்றொரு பெண்ணின் மறைவிடத்தைப்பார்க்கவேண்டாம். ஓர் ஆண் மற்றொரு

ஆணுடன் ஒரே ஆடையில் சேர்ந்திருக்க வேண்டாம். ஒருபெண் மற்றோரு பெண்ணுடன் ஒரே ஆடையில் சேர்ந்திருக்க வேண்டாம் என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸயீத் (ரலி) நூல்முஸ்லிம்.

(صحيح البخاري (7/ 37

عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «إِيَّاكُمْ وَالدُّخُولَ عَلَى النِّسَاءِ» فَقَالَ رَجُلٌ مِنَ الأَنْصَارِ: يَا رَسُولَ اللَّهِ، أَفَرَأَيْتَ الحَمْوَ؟ قَالَ: «الحَمْوُ المَوْتُ»

பெண்களிடம் நீங்கள் செல்வதற்கு உங்களை நான் எச்சரிக்கிறேன் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். கணவனின் சகோதரர் (அப்பெண்ணிடம்) செல்லலாமா என்று மதீனாவாசிகளில் ஒருவர் கேட்டார். கணவனின் சகோதரர்; மரணம் (போன்று தான்) என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: உக்பா இப்னு ஆமிர்(ரலி) (நூல்: புகாரி முஸ்லிம்)

(صحيح مسلم (3/ 1680

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «صِنْفَانِ مِنْ أَهْلِ النَّارِ لَمْ أَرَهُمَا، قَوْمٌ مَعَهُمْ سِيَاطٌ كَأَذْنَابِ الْبَقَرِ يَضْرِبُونَ بِهَا النَّاسَ، وَنِسَاءٌ كَاسِيَاتٌ عَارِيَاتٌ مُمِيلَاتٌ مَائِلَاتٌ، رُءُوسُهُنَّ كَأَسْنِمَةِ الْبُخْتِ الْمَائِلَةِ، لَا يَدْخُلْنَ الْجَنَّةَ، وَلَا يَجِدْنَ رِيحَهَا، وَإِنَّ رِيحَهَا لَيُوجَدُ مِنْ مَسِيرَةِ كَذَا وَكَذَا»

'சில பெண்கள் ஆடைகள் அணிந்தும், நிர்வாணமாகவும், ஆண்களைச் சுண்டி இழுக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். அவர்களது தலை முடி ஒட்டகத்தின் திமில் போன்று இருக்கும். (இப்படியான ஒரு கூட்டம் இனி தோன்றுவார்கள்) இவர்களை நான் பார்த்ததில்லை. இவர்கள் நரகவாதிகளாக இருப்பார்கள்' என்று முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ( நூல் : முஸ்லிம்)

பெண்ணின் பாதுகாப்புக் குறித்து இது போன்ற ஒரு போதனையை எந்தவொரு தலைவரும் ஆன்மீகவாதியும் கூறியதில்லை.

முஸ்லிமான ஆண்கள் பெண்கள் தங்களது ஆடைகளைப் பேணுவதோடு, கற்பையும் பாதுகாத்து ஒழுக்கத்துடன் நடக்கவேண்டும் என்ற எச்சரிக்கை இந்த பொன்மொழியில் உணர்த்தப்பட்டுள்ளது போலவே முறைதவறி நடக்கும் பெண்கள்

நரகத்திற்குரியவர்களாக இருப்பார்கள் என்றும் எச்சரிக்கை செய்கிறார்கள். நபிகளார் அவர்கள் கூறிய அந்தக்காலம் இன்று வந்து விட்டதோ என அஞ்சத் தோன்றுகிறது.

பெண்கள் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான ஒரு சிறந்த போதனை யை இஸ்லாம் வழங்கியுள்ளது. கற்பழிப்பு, கற்பழிக்க முயற்சித்தல் என்ற துஷ்பிர யோகங்களுக்கான தண்டனையாக மரணதண்டனையை இஸ்லாம் வலியுறுத்து கின்றது.

இவைகள் கடைப்பிடிக்கப்படும் போது பெண்களுக்கெதிரான துஷ்பிரயோ கங்கள் தாணாக இல்லாமலாகிவிடும்.